**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 106/2018 |
| வழக்கு சாட்சி | : | PW 8 |
| நாள் | : | 03.11.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிரஞ்சீவி தர்மன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | பழனியப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

4ம் எதிரி இறப்பு. 1, 3, 8 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2, 5 முதல் 7 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் திருத்தணியில் வசித்து வருகிறேன். நான் செந்தமாக லாரி வைத்து தொழில் செய்து தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் தயார் செய்த பார்வை மகஜரில் நானும், என்னுடன் திருத்தணி சேர்ந்த அர்ஜுணன் என்பவரும் கையொப்பம் செய்தோம். அதில் முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.21** ஆகும். அதில் என்ன எழுதியுள்ளது என்பது தெரியாது. மேலும், கைப்பற்றுதல் மகஜரிலும் கையொப்பம் செய்தோன், அதில் என்ன எழுதியுள்ளது என்பது தெரியாது. அதிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.22** ஆகும்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 09.10.2016 காலை 7.50 மணிக்கு திருத்தணி வசிக்கும் அதிமுக கவுண்சிலர் ஆப்பில் ஆறுமுகம் என்பவரை அவருடைய சொந்தமான காரில் வரும்போது திருத்தணி புதியதாக கட்டி வரும் காவல் நிலையம் அருகே அவரை

கொலை செய்ததாகவும், அந்த இடத்தில் திருத்தணி காவல் ஆய்வாளர் அவர்கள் சுமார் 10.45 மணிக்கு இடத்தை பார்வை செய்தார் என்றும், அவர் தயாரித்த பார்வை மகஜரில் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுகொண்டதற்கு இணங்க நாங்களும் அதற்கு சம்மதித்து அவர் தயாரித்த பார்வை மகஜரில் நானும், திருத்தணி அர்ஜுனன் என்பவர் கையொப்பம் செய்தோம் என்றும், பகல் 12.15 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து ரத்தம் தூய்ந்த மண், சாதரண மண் மற்றும் கண்ணாடி தூள்களை மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரிலும் நானும், திருத்தணி அர்ஜுணனும் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.11.03 18:49:22 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 106/2018 |
| வழக்கு சாட்சி | : | PW 9 |
| நாள் | : | 03.11.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கேத்தரின் மோனிகா | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

4ம் எதிரி இறப்பு. 1, 3, 8 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2, 5 முதல் 7 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை மருத்துவ கல்லுரியில் முதுகலை படிப்பான M.D பயின்று வருகிறேன். கடந்த 09.02.2016 திருத்தணி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது 48 வயது ஆன ஆறுமுகம் என்பவரது உடல் மீது பிரேத பரிசோதனை செய்ய வேண்டி திருத்தணி காவல் நிலைய குற்ற எண்.640/2016 என்ற வழக்கில் காவல் ஆய்வாளர் அவரின் வேண்டுகோள் கடிதத்துடன் திருத்தணி காவல் நிலைய தலைமை காவலர் தேவன் கொடுத்த கடிதத்தை பெற்று பகல் 3.10 மணிக்கு பிரேதத்தை பார்வை செய்து பகல் 3.40 மணிக்கு பிரேதத்தை பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். பிரேதமானது விரைப்பு தன்மையுடன் காணப்பட்டது.

**வெளிபுற காயங்கள் முறையே**

மூக்கில் இரண்டு துவரங்கள் வழியே ரத்தம் வழிந்து இருந்தது. இடது புற தலையில் 16 x 10 x 1 செ.மி அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. இடது புற தலையில் 15 x 10 x 1 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. இடது முன் தலையில் 4 x 1 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. இடது காதின் மேல்புறத்தில் 5 x 10 செ.மி அளவில் வெட்டு காயம்

காணப்பட்டது. வலது தோள் பட்டையில் 6 x 6 செ.மி அளவில் ஒரு சீராய்ப்பு காயம் காணப்பட்டது. வலது கையில் 8 x 4 x 2 செ.மி அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. வலது கை கட்டை விரலில் எலும்பு முறிவு இருந்தது. வலது கை ஆள் காட்டி விரலில் 4 x 2 செ.மி அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. வலது கையின் நடு விரல் 2 x 3 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. வலது கையில் நடுவில் மற்றும் மோதிர விரல் இடையே 4 x 4 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. வலது கை மோதிர விரலில் 5 x 1 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. வலது கை மோதிர விரலில் 4 x 2 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. வலது கை கடைசி விரலில் 2 x 0.5 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. வலது கை முட்டியில் 8 x 5 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. இடது கை மோதிர விரலில் முழுவதுமாக கிழிந்த காயம் காணப்பட்டது. வலது கையில் முட்டிக்கு மேலே 6 x 3 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. வலது காதில் கீழ்லிருந்து 4 x 0.5 x 0.5 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. வலது காதின் மேலே 7 x 1 செ.மி அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. வலதுபுற தலை பகுதியில் ஒரு ஆழமான வெட்டு காயம் எலும்பு வரை காணப்பட்டது. வலது புற தலையில் வெளிபுறத்தில் ரத்தம் காயம் 5 x 5 செ.மி அளவில் கண்ணிய காயம் காணப்பட்டது.

**உட்புற காயங்கள் முறையே**

தலையை பிரித்து பார்த்ததில் இடது பக்க உட்புறத்தில் எலும்பு துகல்கள் காணவில்லை. மேலும் வலது புற தலை உட்புறத்தில் ரத்தம் 25 மி.லி. கட்டிய நிலையில் இருந்தது. இடது புற தலையில் மூளையில் ஒரு பகுதி காணவில்லை. நுறையீரல், மண்ணீரல், இதயம், கல்லீரல், சிறுநீரகங்கள் வெளிரி நிலையில் காணப்பட்டது. வயிற்று பகுதியில் 10 மி.லி. அளவில் மஞ்சள் நிறத்தில் திரவம் காணப்பட்டது. இதயம் காலியாக இருந்தது. சிறு குடலில் 30 மி.லி அளவில் ஒரு மஞ்சள் நிறத்தில் திரவம் காணப்பட்டது. கல்லீரலில் ஒரு பகுதி, சிறுகுடலின் ஒரு பகுதி, வயிற்றின் ஒரு பகுதி, சிறுநீரகத்தின் ஒரு பகுதி தடஅறிவியல்

துறைக்கு அனுப்பிவைத்தேன். தடஅறிவியல் துறையின் அறிக்கை பெற்று 02.12.2016ம் தேதி இறப்புக்கான இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த அறிக்கையில் இந்த பிரேதமானது எந்த விதமான விச தன்மை இல்லை என்றும், இறப்பிற்கான காரணம் முக்கியமான உருப்புகள் காயம் ஏற்பட்டு அதிகமான ரத்த போக்கு ஏற்பட்டு அதனால் இறப்பு ஏறப்பட்டது என்று அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.23** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.11.03 18:49:30 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.